# சமகாலச் சிவாலயங்களிற் பரிவாராலயங்கள் சிவாகம மரபுகளை அடிப்படையாகக் கொண்ட நோக்கு

சுகந்தினி சிறிமுரளிதரன்

ஆய்வுச்சுருக்கம்

சிவாகமங்கள் சிவாலயத்தின் அமைப்பு, கிரியை முறை, வழிபாட்டு மரபு என்பவற்றின் மூலநூல்களாகும். சிவாலயங்களின் அமைப்பு விதிமுறைகளைச் சிவாகமங்களும், சிற்பசாஸ்திரங்களும் மிகவிரிவுபடக் கூறுகின்றன. சிவனைப்பிரதானமூரத்தியாகக் கொண்ட சிவாலயமானது பிராகாரங்கள், மண்டபங்கள், கோபுரங்கள், எனும் கலைத்துவ அம்சங்களுடன் பரிவாராலயங்கள், மூர்த்திபேதங்களின் ஸ்தானம், ஏனைய மண்டபங்கள் என விரிவுபடும் தன்மையுடையது. சிவாலயங்களில் எத்தகைய ஸ்தானத்தில் எவ்வெவ் தெய்வங்கள் பரிவாரதேவர்களாக அமையத்தக்கவை என்பதனைச் சிவாகமங்கள் விரிவாகக்கூறுகின்றன. சிவாலயங்களில் இடம்பெறும் பரிவாரங்களது ஸ்தாபனவிதிமுறைகளைச் சைவத்தின் முதல் நூல்களாக விளங்குகின்ற சிவாகமங்களை அடிப்படையாகக்கொண்டு எடுத்துக்கூறுவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். எனினும் பரிவாரஸ்தாபனவிதிபற்றிச் சிறப்பாகக் கூறுகின்ற காரணாகாமம் இவ்வாய்வின் மூலநூலாகும். ஏனைய சிவாகமங்களிற் கூறப்படும் விடயங்கள் துணைமூலங்களாக அமைகின்றன. இவ்வாய்வானது விபரணாய்வு முறை, பகுப்பாய்வு முறை ஆகிய ஆய்வுமுறைகளில் மேற்கொள்ளப்படுவதுடன் காரணாகமத்தில் கூறப்படுகின்ற விடயங்களை ஏனைய சிவாகமங்களுடனும், சிற்பசாஸ்திரங்களுடனும் ஒப்பிட்டுக் கூறுவதினால் ஒப்பீட்டாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றது. சமகாலவழக்கில் சிவாலயங்களிற் பரிவாரதேவர்களைப் பிரதிக்ஷ்டைசெய்வதிலும், பரிவாராலயங்களை அமைப்பதிலும் பலசவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன. ஆதலால் சிவாகமங்கள் கூறுகின்ற பரிவாரஸ்தாபனவிதிமுறைகளை ஆராய்வதாகவும் இவ்வாய்வு அமைகின்றது. சிவாலயங்களின் கட்டமைப்பில் பரிவாராலயவிரிவு, புனருத்தாரணம், அமைவு, ஸ்தானம் பற்றி ஐயங்கள் ஏற்படுமிடத்து அவற்றுக்குப் பிரமாணபூர்வமாக ஆதாரப்படுத்திக்கூறக்கூடிய விதிமுறைகளை இவ்வாய்வு தெளிவுபடுத்த முனைகின்றது.

**திறவுச்சொற்கள்:** காரணாகமம், சிவாகமங்கள், சிவாலயங்கள், பரிவாரங்கள் மற்றும் சிற்பசாஸ்திரங்கள்.

## அறிமுகம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சமயம் சைவசமயமாகும். சிவாகமங்கள் சைவசமயத்தின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்துக்கூறும் மூலநூல்க ளாகும்.இவை சிவாலயப்ப ண்பாட்டின் நிலைக்களனாகவும் விளங் குகின்றன. சிவாலயங்கள் சிவாகம மரபினை அடி யொற்றி அவற்றினையே முதற்பிரமாண மாகக் கொண்டு எழுந்தவையாகும். சிவாலயங்களின் ஸ்தானம், அமைவு, அமைப்பு முறை, திசை, மூர்த்திபேதம், கலை நயம், கட்டடமரபு, கோபுரம், பிரா காரம்,பரிவாரம், விரிந்த மண்டபங்கள் போன்ற பல்வேறுபட்ட பிரமாணங்

களையும், கிரியை மரபுகளையும் ஒழுங்கமைவுகளையும் எடுத்துக்கூறும் மூலநூல்களாகச் சிவாகமங்கள் விளங்குகின்றன. சிவாகமங்களின் மரபுகளுக்குச் சிற்பசாஸ்திரங்களும் சார்பு நூல்களும் துணைநிற்கின்றன.

சிவாகம மரபுகள் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் சிறப்புப்பெறும் அதேவேளை இன்று மேற்குலகநாடுகள் எங்கும் பரவும் தன்மைபெற்று வளம் பெறுவது சமகாலவழமையாகும்.. சிறப்பாகப் பூர்வகாரணாகமத்தின் அறுபதாவது பரிவார இலட்சணவிதிப்படலம் சிவாலயங்களில் இடம்பெறும் பரிவாராலயங்கள் பற்றி விரிவுபடக்கூறுகின்றது. இதனை ஏனைய சிவாகமங்கள் கூறும் விதிமுறைகளுடன் ஒப்பிட்டு நோக்குவது அவசியமுடையதாகின்றது.

சிவாலயங்களின் அமைப்பு முறையில் புனருத்தாரணம், ஆலயங்களின் விரிவு, பரிவாரக்கோயில்களின் ஸ்தானம் பற்றிய பல்வேறுவிதமான ஐயங்கள் ஏற்படுகின்ற வேளையில் பரிவாராலயங்களை எவ்விதம் அமைத்து மூர்த்தியை ஸ்தாபனம் செய்வது என்பது பற்றிய பல்வேறுவிதமான விடயங்களையும் பரிவார இலட்சண விதிகூறும் விதிமுறைப்படி நோக்குவது சிவாலயப்பண்பாட்டின் நிலைக்களனுக்கு ஏற்புடையதாகிறது எனும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**சிவாலயங்கள்**

சிவாலயமானது சிவலிங்கத் திருவுருவத்தைப் பிரதான மூர்த்தியாகக் கொண்டு பரந்து விரிந்து விளங்குகின்றது. சிவாலயங்களின் அமைப்பு முறையானது சிவாகம மரபு சார்ந்தது. சிவாகமங்கள் கூறுகின்ற கிரியைமரபுகளுக்குரிய முக்கிய ஸ்தானமாக விளங்குவது சிவாலயத்தில் இடம்பெறுகின்ற திருவுருவங்களும், சிவாலயக்கட்டட அமைப்பு முறைகளுமாகும். அத்தகைய சிவாலயக் கட்டட அமைப்பு முறைகள் கர்ப்பக்கிருகத்தை மையமாகக்கொண்டு மண்டபங்கள், பிராகாரங்கள், விமானம், கோபுரங்கள் பரிவாராலயங்கள் என்று விரிந்து செல்லும் சிறப்புடையன.

கோயில் என்ற பெயர் வழிபாட்டுத் தலங்களுக்கு வழங்கப்படும் பெயராக அமையினும் அப்பெயர் சிறப்பாகச் சிவனை முழுமுதலாகக் கொண்டு விளங்கும் சிவாலயத்திற்குப் பொருத்தமாக அமைகின்றமை சிறப்பிற்குரிய அம்சமாகும். சிவாலயங்கள் சைவசமயத்தின் கொள்கைகளைத் தமது உறுப்புக்கள் ஒவ்வொன்றாலும் உணர்த்துவதினால் ஆலயங்கள் எல்லாவற்றிலும் சிறந்தனவாகும். சிவாலயம் அண்டத்தில் காணப்படும் பாகுபாடுகளையும், பிண்டத்தில் காணப்படும் பாகுபாடுகளையும் குறிப்பதாகும். அண்டத்தில் காணப்படும் அத்துவாக்களின் வகையாலும்,உடலில் காணப்படும் உறுப்புக்களின் வகையாலும் தியானத்தின் நிமித்தம் உடலில் பாவிக்கப்படும் ஆதாரங்களின் வகையாலும் சிவாலயமானது அண்ட, பிண்ட, சொரூபமாக விளங்கும் சிறப்பிற்குரியதாகும்.

**சிவாகமங்கள்**

சிவாகமங்கள் காரணம், காமிகம், யோகஜம், சிந்திஜம், அயிதம், தீப்தம், சூக்சுமம், சஹஸ்ரம், அம்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிஸ்வாசம், ஸ்வாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், புரோத்கீதம், லலிதம், சிந்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் எனும்

இருபத்தெட்டாகும். (காரணாகமம்,I.8-11) சிவாகமங்கள் கூறும் நான்கு பாதங்களாகிய சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் ஆகியவற்றில் கிரியாபாதம் கிரியை பற்றியும், சிவாலயங்களோடு தொடர்புடைய கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் ஆகிய நான்கு பிரிவுகளையும் விளக்குகின்றது. சிவாகமங்கள் கூறுகின்ற கிரியாபாதத்தில் அமையும் கர்ஷணம் எனும் பகுதியில் கிராம நகர ஆலய அமைப்புக்கள் விரிவாகக்கூறப்படுகின்றன. இதுபற்றிய விளக்கத்தினை மேல்வரும் அட்டவணை 01 விளக்குகின்றது.

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பன்னெடுங்காலமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற சிவாலயங்கள் பெரும்பாலும் இத்தகைய சிவாகம ஒழுங்கு முறைகளைப் பின்பற்றிவந்துள்ளமையை அறியலாம். சிவாகம மரபு நிலவிவருவதற்குச் சிவாலயக்கட்டடக்கலை ஒன்றே சிறந்த சான்றாக அமைகின்றது. சிவாலயங்கள் அமைக்கத்தக்க இடங்களை விளக்க முற்படும் சிவாகமங்கள் ஆலயம் அமைப் பதற்கு முன்பாக மக்கள் வாழுகின்ற கிராமம் அல்லது நகரம் ஒழுங்காக அமைக்கப்படவேண்டும் என்பதனைச் சிறப்பாக எடுத்துக்கூறுகின்றன. பல்வேறுபட்ட சமூக அமைப்புக்களின் மத்தியில் சிவாலயங்களை மையமாகக் கொண்டுநகரங்கள் அமையவேண்டியதன் அவசியத்தையும் சிவாகமங்கள் குறிப்பிடத்தவறவில்லை. மக்கள் அமைதியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற நல்ல சுற்றுப்புறச்சூழலை தேர்ந்து எடுப்பதும் அந்த இடத்தை முறையாக வகுத்து இன்ன இடத்தில் ஆலயம் என்றும், இதனை மையமாகக் கொண்டு கல்விச்சாலை, மருத்துவசாலை, நீர்நிலை முதலான அடிப்படைவசதிகளை உள்ளடக்கிய திட்டமிட்ட ஒருகிராமத்தினதோ அல்லது நகரத்தினதோ அமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் சிவாகமங்கள் கூறுகின்றன. (காரணாகமம் 1.8.29-56, காமிகாகமம் 1.20)

இதிலிருந்து சிவாகமங்கள் சிவாலயஅமைப்புக்கான விதிமுறைகளைக் கூறியிருப்பினும் கிராமம், நகரம், பட்டினம், வீடுகள், வீதிகள் எனும் அமைப்புகளிலிருந்து சிவாலய அமைப்பினைப் பிரித்தெடுக்கமுடியாத தன்மைகளைக் கிராம விந்நியாச விதிகள் மூலம் கூறப்பட்டுள்ளமை இங்கு மனங்கொள்ளத் தக்கது.

சிவாகம முறையில் அமைக்கப்பட்ட திருக்கோயில்களை எடுத்து நோக்கும் போது பெரும்பாலும் சீரான தன்மையு டையனவாகக் காட்சியளிக்கின்றமை குறிப் பிடத்தக்க அம்சமாகும். இதற்கு முக்கிய காரணம் சிவாகமங்களிற் கூறப்பட்ட விதிமுறைகளே எனலாம்.

"ஆலயம் அமைப்பதற்கு எந்த ஆலயப் பிரமாணத்தின்படி கர்ஷணம் முதல் அர்ச்சனை வரை செய்ய ஆரம்பிக்கப் பட்டதோ அதன்படியே செய்ய வேண்டும். இடையில் வேறு தந்திரங்களால் செய்யக்கூடாது என்பது ஆகமம் கூறுகின்ற விதிமுறையாகும்."
(காரணாகமம் I.1..70 ,காமிகாகமம் 1.1.113) எனினும்,

"ஒரே மூலாகமத்தில் அனைத்து விடயங்களும் கூறப்படாதவிடத்து ஏனைய மூலாகமங்களி லிருந்து பெற்றுச் செய்யவேண்டும்." (காரணாகமம் I.1..71) எனவும் காரணாகமம் கூறுகின்றது. எனவே சைவக்கோயில் நிர்மாணம் என்பது சாஸ்திரோக்தமாகவே செய்யப் பட வேண்டும் என்பது சிவாகம நியதியாகும். வேறு எந்த உத்தியாலும்

செய்யக்கூடாது. அதனால்தான் சிவாலய நிர்மாணங்கள் குறிப்பிட்ட ஒரு வரை யறையில் அமைக்கப்படுகின்றன. இதனால் சைவக்கோயில் அமைப்புக்கள் ஒத்த தன்மையுடையனவாகக் காட்சிய ளிக்கின்றன. எனினும் சைவக்கோயில் அமைப்பில் குறைந்தபட்ச அமைப் புக்களும், விரிவான அமைப்புக்களும் உண்டு. இவை இடம், பொருள், ஏவல் எனும் மூன்று இயல்புத்தன்மைகளால் வேறுபடுகின்றன. அவ்வாறான அமைப் புகளும் சாஸ்திர சம்மதமானவையே எனலாம்.

"கர்க்ஷணாதி முதல் பிரதிக்ஷ்டை வரையும் மூலாகமங்களினாலேயே செய்யும் போது அவ்வாலயங்கள் ஆகம வரையறைக்குள் உட்பட்ட ஆலயங்களாக விளங்கும்" (காரணாகமம் I.1.70,71) என்று காரணாகமம் குறிப்பிடுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### சிவாலயப்பண்பாடு

சிவாலயமே சைவப்பண்பாட்டின் உறைவிடமாகும். அங்கு பல்வேறு நிலை களில் இடம்பெறும் சிவனது வடிவங்கள் காலம் காலமாகச் சைவப்பாரம்பரியத்தின் பண்பாட்டுத்துறைகளை வளம்படுத்து வதில் பெரும் பங்கு கொண்டுள்ளன. சமயம், தத்துவம், வரலாறு, இலக்கியம், கலை, அழகியல் முதலிய பண்பாட்டுக் கூறுகளின் நிலைக்களனாகச் சிவாலயமும் அங்கு உறையும் சிவவடிவங்களும் விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிவாலயங்களின் வழிபாட்டு மரபில் பரிவார தெய்வங்களுக்கும், பரிவா ராலயங்களுக்கும் முக்கிய இடம் உண்டு. இந்துசமய நெறியிலுள்ள அறுவகைச் சமய நெறிகளையும் உள்ளடக்கிய தாகவும், ஏனைய சமயநெறிமரபுகளை சைவநெறி தன்னளவில் ஏற்றுக்கொண்ட ஒருதத்துவத்தைப் பிரதிபலிப்பதாகவும் சிவாலயப் பரிவாரதேவர்கள் விளங்கு கின்றனர். அதாவது காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், சௌரம், வைணவம் ஆகிய நெறிகள் பரிவார தேவர் வரிசையில் இடம்பெற்று சிவாலயக் கட்டடக் கலையில் உரிய இடத்தினைப் பெற்று ள்ளன. ஆகவே சிறப்புமிக்க இச்சைவநெறி யானது இவ்வைந்து நெறிகளையும் தன்னுள் ஏற்று அத்தெய்வங்களைப் பரிவாரதெய்வங்களாகக்கொண்ட சிறப்பு சிவாலயத்திற்கே உரியது எனலாம். அதேவேளை பிரமா, சரஸ்வதி, இந்திரன் போன்ற லோகபாலகர்களும், அகஸ்தியர், ஜ்யேஷ்டாதேவி, வைரவர் போன்ற தெய்வங்களும் சிவனது பரிவாரங்களாக அமையும் மரபுகளையும் சிவாலயவிதிகள் தெளிவுபடக்கூறுகின்றன.

### பரிவாராலயங்கள்

சிவாலயங்களில் கர்ப்பகிருகத்தி லிருக்கும் சிவலிங்கத்தை மூலவர் என்றும், அத் தெய்வத்திற்குப் பரிவாரங்களாக இருப்ப வர்களைப் பரிவாரத்தெய்வங்கள் என்றும், அவற்றிற்குரிய ஆலயங்களைப் பரிவாராலயங்கள் என்றும் அழைக்கும் மரபு காணப்படுகின்றது. சிவாலயங்களில் இடம்பெறும் சிவனுக்குரிய பரிவாரங்கள் பற்றிய விடயங்களை சிவாகமங்கள் பரிவாரஸ்தாபனவிதிகளாகக் கூறுகின்றன. பரிவாரங்கள் என்பவை யாவை? அவை எத்தனை எண்ணிக்கையுடையவை? அவை அமையத்தக்க ஸ்தானம் யாது? அவை எத்தகைய ஸ்தானத்தில் எத்தகைய அளவுப் பிரமாணத்தில் விமானம், பீடம், மூர்த்தி எனும் வகையில் அமையத்தக்கன என்பதனை விரிவுபடக்கூறுவதே சிவாக மங்களின் பரிவார இலட்சணவிதிப் படலமாகும். சிவாகமங்கள் கூறுகின்ற பரிவாரலட்சணம் பற்றிய விடயங்களை அட்டவணை 01 மூலம் அறியலாம்.

இதனை அடியொற்றிப் பூர்வ காரணா மத்தின் அறுபதாவது படலமாகிய பரிவாரஸ் தாபனவிதிப்படலம் கூறுகின்ற விடயங்களையும், ஏனைய சிவாகமங்கள் கூறும் சிறப்புக்களையும் விரிவுபட நோக்கலாம்.

**பரிவாராலாயம் அமைப்பதற்குத் தேவையான மூலகர்த்தாக்கள்**

திருக்கோயில் ஒன்றினை அமைப் பதற்குத் தேவையான மூலகர்த்தாக்கள் யாவர் என்பதனைக் காமிகாகமம் கூறுகின்றது.

"ஆலயம் அமைக்கவேண்டிய இடத்திற்கு உரிமையாளரான ஆலயம் கட்ட வேண்டிய யஜமானன், ஆலய அமைப்பு விதிகளை நன்கு அறிந்த சிற்பி, சிவாசாரியர் என்பவர்கள் குறிப்பிடப்படு கின்றனர்." (காமிகாகமம் 1.10.21)

ஓர் ஆலயம் கட்டடப்பட்டு அங்கு பிரதிக்ஷ்டை நடக்கும் வரையில் இம்மூவரின் தொடர்பு இன்றியமையாத தாகும். ஆலயத்தைக் கட்டுகின்ற ஸ்தப தியின் நுணுக்கமான கட்டுமானத்தினால் சிவாலயமானது,

"ஸ்தபதி முதலியவர்களினாலேயே அளவுகளுடன் அமைக்கப்பட்ட கிராமாதிகளும், வீடுகளும், தேவால யங்களும், சந்திர நட்சத்திரங்கள் இருக்கும் வரையில் சாசுவதமாக இருப்பதைக்காண முடிகின்றது." (மயமதம் 9.130)

எனக்கூறுகின்றமை ஸ்தபதியின் முக்கித்துவத்தினை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. மேலும், வாஸ்து சாஸ்திரம் தெரியாதவன் அகந்தையால் ஆலயம் அமைக்க முற்பட்டால் அவர் ராஜ துரோகம் செய்தவர் எனக்கருதி மரண தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டும் என போஜமன்னர் 11ஆம் நூற்றாண்டில் மாளவ தேசத்தை ஆண்டபோது கட்ட ளையிட்டதாக சமாராங்கன சூத்திர தாரம் என்ற சிற்பநூலில் குறிப்புண்டு. (Kramrisch, 1976,.P .08.)

இவ்வாறான கருத்துக்கள் சிவாலயகட்டுமானத்தில் ஸ்தபதியின் முக்கியத்துவத்தினைத் தெளிவுபடுத்து கின்றன.

சிவாலயம் கட்டுவதற்குரிய இடத் தை தேர்ந்தெடுப்பது முதல் கும்பாபி ஷேகம் வரையில் எல்லா விதிகளையும் சிவாகமங்களும், சிற்பசாஸ்திரங்களும் விளக்கும் அதேநேரத்தில் ஒவ்வொரு விஷயத்தின் கீழும் ஆலயம் கட்டுபவர், இடம், நோக்கம், ஆகியவற்றிக்கு ஏற்பப் பல மாறுதல்களும் கூறப்படுகின்றன. இவற்றினை ஆதாரமாகக் கொண்டே ஸ்தபதியானவர் ஆலயம் கட்டும் கலையிலும் கால, நேர, இடவசதிகளுக்கு ஏற்றவகையில் சில மாறுதல்களையும் செய்வதைக்காணலாம். எனினும், ஆலய நிர்மாணத்தைப் பொறுத்தவரையில் மிக நுணுக்கமாக ஆராய்ந்து தகுதியான இடத்தில் உரிய பிரமாணப்படி நிர்ணயித்தலே சாலச்சிறந்ததாகும்.

**கர்ப்பகிருக அளவுப்பிரமாணமும் பரிவாராலயங்களும்**

சிவாலயங்களின் முக்கியமான மையப் பகுதி கர்ப்பகிருகமாகும். 'கர்ப்பம்' என்பது உயிர் உள்ள தோற்றம் எனவும். 'கிருகம்' என்பது அந்தத் தோற்றம் உண்டாகிய இடம் எனவும் பொருள்படும். உயிரினத்தின் தோற்றத்திற்கு எப்படி கர்ப்பம் முக்கியமானதோ அதேபோன்று தெய்வீகம் மிளிர்வதற்குரிய புனிதமான மையப்பகுதி கர்ப்பக்கிருகம் எனக் கொள்ளப்படுகின்றது. சிவாலயங்களிற் சிவவழிபாட்டிற்குரிய சின்னமாக அமைந் திருப்பது சிவலிங்கம். பரந்த கருத்துக்கள்

பல இச்சின்னத்தில் அடங்கியுள்ளன. லிங்கம் என்பது ஆன்மாக்களுக்கு லயம் ஏற்படுத்துவது என்றும் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் காரணமாக அமைவ தென்றும் பொருள் கொள்ளப் படுவது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. இத்தகைய சிறப்புடைய சிவலிங்கமே சிவாலயத்தின் கருப் பொருளாகும்.

"கர்ப்பகிருகத்தின் வளர்ச்சியே ஏனைய மண்டபங்களும், பிராகாரங் களுமாகும். மண்டபங்களும், பிராகார ங்களும் கர்ப்ப கிருகத்தின் விஸ்தீரணத் திற்கு ஏற்ப அமையவேண்டிய முறைமை களையும் கர்ப்பகிருகம் பிராகாரங்களால் சூழப்பட்டு விரியும் முறையையும் காரணாகமம் கூறுகின்றது."
(காரணாகமம்.8.1-56)

காரணாகமம் பரிவாரங்களுக்குரிய ஸ்தாபனம் பற்றிக்குறிப்பிடும் போது

"கர்ப்பகிருகம் எனும் மாளிகை யினைச்சுற்றிப் பரிவாரங்களைக் கற்பிக்க வேண்டும்".
(காரணாகமம் 1.60.1) என்கிறது.

கர்ப்பகிருகத்தின் அளவுப் பிரமாண த்தை அடிப்படையாகக் கொண்டே பரிவாரங் களை ஸ்தாபிக்கவே வண்டும் என்பதனையும் காரணாகமம் குறிப்பிடத் தவறவில்லை.

"மூலக்கர்ப்பக்கிருகத்தின் பிரமா ணத்தை அடிப்படையாகக் கொண்டு பரிவாராலயத்தைச் செய்தல் வேண்டும்"
(காரணாகமம் 1.60.6)

"கர்ப்பகிருகம் எனும் மந்திரத்தின் அரைவாசியெனும் அரையளவு சமமான தாகவோ அல்லது அரைப் பங்குக்குச் சமமாகவோ அல்லது மூன்றிலிரு பங்கோ ஆலயத்தின் அகல அளவாகப் பரிவா ராலய அளவானது விதிக்கப்பட்டுள்ளது".
(காரணாகமம் 1.60.7)

சிவாலயப் பரிவாரபிம்பங்களது உயரம் கர்ப்பக்கிருக லிங்கத்தின் உயரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டியதனை சிவாகமங்கள் குறிப்பிடு கின்றன.

"மூலவராகிய லிங்கத்தின் பூஜா பாகத்திற்கு சமமாகவோ அதன் அரைப் பங்கோ அல்லது மூன்றிலிரண்டு பங்கு அளவோ உயரம் அமைதல் வேண்டும்."
(காரணாகமம் 1.60.23)

பரிவாராலயங்களின் வாயில் அளவானது எவ்வகையில் அமைய வேண்டும் என்பதனைக் காரணாகமம்

"மூலபிம்பத்தின் உயரத்தில் 1/2 பங்கு பட்ச அளவு அல்லது பிண்டிகையின் (ஆவுடையார்) உயர்த்தில் 1/5 பங்கு அளவு டையதாக செய்ய வேண்டும். பிரதிமா இலட்சணத்தின்படி எல்லாவற்றையும் பின்பற்ற வேண்டும்." (காரணாகமம் 1.60.24)

எனக் குறிப்பிடுவதிலிருந்து அளவுப்பிரமாணத்தின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகின்றது.

### காரணாகமத்தில் பரிவாரஸ்தாபனவிதி

சிவாலயங்களில் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும் மூர்த்தியின் இயல்புகள் ஸ்வதப்பிரதானம், ஸாங்கம் எனும் இரு முறைகளில் இடம்பெறுவதாக சிவாக மங்கள் குறிப்பிடுகின்றன.

"பரிவாரத்தோடு கூடியது ஸ்வதப் பிரதானம் எனவும் கூறப்படும். ஸாங்கம் என்பது பரிவாரம் இன்றி ஸ்தாபித்த லாகும்." (காரணாகமம் 1.57.11-12, காமிகாகமம் 11,66.5-9)

ஆகவே சிவாகமங்களில் இடம் பெறுகின்ற ஸ்வதப்பிரதான மூர்த்தியுடைய சிவாலயங்களே இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

பரிவாரங்களுடன் கூடிய ஸ்வதப் பிரதான ஆலயம் எங்கு இடம் பெறவேண்டும் என்பதனைச் சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன.

"கிராமத்தின் தொடக்கத்திலோ, நதிக் கரையிலோ புஸ்கரணீ முதலிய தடாகத்திற்கு அண்மையிலோ காட்டிலோ நந்தவனத்திலோ மலையிலோ அல்லது மனம் கவர்ந்த இடத்திலோ வேறு இடத்திலோ ஸ்வதப்பிரதான ஆலயத்தைச் செய்ய வேண்டும்" (காமிகாகமம் 1,60.4)

இதிலிருந்து அமைதியும், தூய்மையும் நிலவும் இயற்கைச்சூழலில் சில இடங்களில் தெய்வீகசக்தி இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை இந்துக்களிடையே நிலவி வந்துள்ளமையையும் இயற்கைச் சூழலை நன்கு பயன்படுத்திச் சிவாலயப்பண்பாட்டினை பேணிவந்துள்ளமை யையும் அறியமுடிகின்றது. சுப்பிர பேதாகமம்

"பரிவாராலயங்களை வெளியிலோ உட்புற மாகவோ அமைக்கலாம்." (சுப்பிரபேதாகமம், 39.31) எனக்கூறுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிவாலயங்களில் இடம் பெறுகின்ற பரிவார தெய்வங்களின் எண்ணிக்கையானது எட்டு, பதினாறு, முப்பத்திரண்டு என விரிந்து செல்வதனையும் இப்பரிவாரதெய்வங்கள் பிராகாரங்களில் இடம் பெற வேண்டிய முறைமையையும் சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன. கர்ப்பக்கிருகத் திலிருந்து வெளியே முறையே அந்தர் மண்டபம், அந்தர்ஹாரம், மத்யஹாரம், மர்யாதா, மஹாமர்யாதா என ஐந்தாகப் பிராகாரங்கள் அமைகின்றன. பிராகாரங்கள் அமைய வேண்டிய பிராகார இலட்சண விதிமுறைகளைச் சிவாக மங்கள் கூறுகின்றன. இதுபற்றிய விடயத்தினை அட்டவணை 02 தெளிவு படுத்துகின்றது.

சிற்பசாஸ்திரங்களுள் ஒன்றான மயமதம் பிராகாரங்கள் அமைவதன் காரணத்தைக் குறிப்பிடுகையில்

"விமானங்களின் ரக்ஷைக் காகவும், அழகுக் காகவும், பரிவாரங்களை வைப்பதற்காகவும் புத்திமான்கள் பிராகாரத்தைக் கூறியிருக் கிறார்கள்". (மயமதம், 23.1) என்பதன் மூலம் பரிவாரங்களை ஸ்தாபனம் செய்வதற் காகவும் பிரா காரங்கள் அமைக்கப் படுகின்றன என்பது தெளிவுறுகின்றது.

இரண்டாவது பிராகாரத்தில் எட்டு பரிவாரங்களை கல்பிதம் செய்தல் வேண்டும் எனக்காரணாகமம் குறிப்பிடுகின்றது.

"இரண்டாவது பிராகாரத்தில் எட்டு பரிவாரங்களையும் கற்பிக்கவேண்டும். பிராகாரத்தின் சுவருடன் கூடியதாகவோ அன்றி அந்தராளத்தில் அமைந்ததாகவோ பரிவாரங்ளை ஆலயங்களுடன் கூடியதாகவோ ஸ்தாபிக்க வேண்டும். கிழக்கு மேற்கு வாயிலுடையதாகவோ தெற்கு வடக்கு வாயிலுடையதாகவோ அமைக்க வேண்டும்." (காரணாகமம், I, 60.3-4)

எட்டு, பதினாறு, முப்பத்திரண்டு என விரிந்து செல்லுகின்ற பரிவாரங்கள் எந்தெந்தப் பிராகாரங்களில் அமைய வேண்டும் என்பதனைச் சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன.

"ஆலயங்களில் அந்தர்மண்டலத்தில் அஷ்டபரிவாரங்களையும் பதினாறு பரிவாரங்களளெனில் அந்தர்ஹாரத்திலும்,

முப்பத்திரண்டு பரிவாரங்களெனில் மத்யஹாரத்திலும் அமைக்கவேண்டும். இவ்வாறன இடங்களில் சுவரை அண்மித்ததாகவோ அன்றில் மத்தியிலோ அமைக்கவேண்டும்." (அஜிதாகமம் *1.39.2-3)*

பரிவாரங்கள் நோக்கவேண்டிய திசை பற்றிய விடயங்களையும் சிவாகமங்கள் விளக்குகின்றன.

"விருஷபத்தை (நந்தி) கிழக்கிலும், அகஸ்தியரை அக்கினி திக்கிலும், தெற்கில் காத்யாயனியையும் (துர்க்கை), நிருதியில் கணேஸ்வரரையும், மேற்கில் பிரம மாவையும், வாயு திக்கில் சண்முகரையும், வடக்கில் கேசவனையும் (விஷ்ணு), வட கிழக்கில் பாஸ்கரனையும்(சூரியன்) ஸ்தா பிக்க வேண்டும்." (காரணாகமம்,I,*60.9-10)*

"ஈசானத்திலிருந்து அக்கினிவரை யான ஆலயங்கள் மேற்கு நோக்கியும் நிருதியிலிருந்து வாயுதிக்குவரையி லானவை கிழக்கு நோக்கியதாகவும், தெற்கிலிருப்பவை வடக்கு நோக்கிய தாகவும், வடக்குத்திக்கிலிருக்கும் அனைத்து ஆலயங்களும் தெற்கு நோக்கிய தாகவும் அமைக்கப்பட வேண்டும்." (காரணாகமம்,I,*60.20-22)*

சிவாலயங்களில் கோபுரத்து வாரத்திற்கு வலதுபக்கத்திலோ அல்லது இடதுபக்கத்திலோ சூரியனின் ஆலயத்தை அமைக்கவேண்டும் எனக் காரணாகமம், அஜிதாகமம் என்பன விளக்கம் தருகின்றன. (காரணாகமம் *11,105.4*, அஜிதாகமம் *111. 54.11-12)*

சிவாலய வழிபாட்டில் திருநந்தி தேவருக்கு முக்கிய இடம் உண்டு. நந்தியில்லாத சிவா லயம் சிவால யமாகாது. சிவாகமங்கள் பரிவாரங்களில் ஒன்றாக நந்தியை விருஷபம் என்ற பெயருடன் குறிப்பிடுகின்றன.

"கிழக்கில் விருஷபத்தின் ஆலயத்தை நான்கு துவாரங்களுடன் கூடியதாகச் செய்தல் வேண்டும். (காரணாகமம்,I, *60.11)*

"மேற்கு வாயிலுடைய கர்ப் பக்கிருக மாயின் விருஷபத்தை மேற்கில் ஸ்தாபிக்க வேண்டும்" (காரணாகமம், I,*60.13)*

நந்தியின் உருவம் இறைசந்நிதியில் இடம்பெறும். பூஜைக்குரிய நந்திதேவர் இறைவன் சந்நிதிதானத்தில் இறைவனுக்கு நேரே அமர்ந்திருப்பதைக்காண முடி-கின்றது. தென்னிந்தியக்கோயில்களிற் பிரகாரங்களைக்கடக்குந் தோறும் பிரமாண்டமான உருவங்களுடன் பல நந்திகளைக்காணமுடிகின்றது. இதற்கான விதிமுறைகளையும் சிவாகமங்கள் எடுத்துக்கூறுகின்றன.

"வேறு இடங்களிலும் மஹோட்சம் எனும் மகாவிருஷபத்தை நன்கு அறிவாளி யானவன் செய்தல் வேண்டும்." என்கிறது. (காரணாகமம்,I,*60.73)*

விருஷபம் செய்வதற்கான பொருட்கள் எவை என்பது பற்றியும் அதனது இலட்சணங்களையும் ஆகமங்கள் குறிப்பிடுகின்றன.

"உலோகத்தால் விருஷபமானது செய்யத்தக்கது அது நிற்பதாக வோசயனத்திலுள்ளதாகவோ செய்ய வேண்டும். கல்லினாலோ அல்லது மண்ணினாலோ செய்வதாயின் சயனக்கோலத்திலே செய்தல் வேண்டும்". (காரணாகமம்,I, *60.76)*

அஷ்டபரிவாரங்களுள் சண்டேஸ்வரர் சேத்திரபாலர் ஆகியோரைப் பரிவார தேவர்களாகக் காரணாகமம் குறிப்பிட வில்லை. எனினும் காரணாகமம்,

"அந்தர் மண்டலம் எனும் முதலாவது வீதியில் ஸ்ரீகரம் எனும் விமானத்தில் சண்டேஸ்வரரை ஸ்தாபனம் செய்தல் வேண்டும்." (காரணாகமம், I,60.2) எனக்கூறுகின்றது.

அதேவேளை ஈசானதிக்கில் அஷ்டபரி வாரங்களுள் ஒன்றாகச் சண்டேஸ் வரரையும் இணைத்து யோகஜாகமமும் சுப்பிரபேதாகமமும் குறிப்பிட்டுள்ளன. மேலும், சுப்பிர பேதாகமம்

"துவாரபாலர் முதல் பீடம் வரையானது பரிவாரம்" எனக்கூறுகின்றது. (சுப்பிர பேதாகமம், 39.1)

அஷ்டபரிவாரங்களின் ஸ்தானங்கள் பற்றிச் சிவாகமங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான கருத்துக்களை எடுத்துக்கூறுவதைக்காணமுடிகின்றது. இவைபற்றிய விளக்கம் மேல்வரும் அட்டவணை 03 இன்மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

விமானங்கள் திருக்கோயில் அமைப்பில் முக்கியத்துவம் பெறுகின்றன. பரிவாரத் தெய்வங்களுக்குரிய விமான அமைதி களையும் சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன.

"மண்டப அமைப்பிலோ அல்லது சபை போன்ற அல்லது நந்தியாவர்த்த விமானத்திலோ எல்லாவற்றிற்கும் கல்பிக்க வேண்டும்." (காரணாகமம்,I,60.19)

"துர்க்கை ஆலயத்தை ஸ்வஸ்திக விமானத்துடனும், விநாயகர் ஆலயத்தை கஜபிருஷ்ட விமானத்துடனும், குக்குடாண்ட அமைப்புடைய (கோழி முட்டை வடிவம்) விமானத்தை முருகனுக்கும், விஷ்ணுகாந்த விமானத்தை விஷ்ணுவுக்கும், சூரியனுக்கு நந்தியாவர்த்த விமானத்தையும் செய்தல் வேண்டும். (காரணாகமம்,I,60.11-13)

விமானங்கள் பரிவாராலயங்களுக்கு அவசியமில்லை என்பதனையும் சிவாகமங்கள் விளக்கிநிற்கின்றன.

"அறிவாளியானவன் விமானத்துடன் கூடியதாகவோ இல்லாமலோ பரிவாரா லயத்தை ஸ்தாபிக்கலாம்." (காரணாகமம், I,60.25) என்கிறது. அதேவேளை,

"விமானமின்றி எந்தக்கர்மாவைச் செய்தாலும் அவையனைத்தும் பலனற்றதாகி விடு கின்றது." (சிவாகம பரிபாஷா மஞ்சரி,124)

என சிவாகம பரிபாஷா மஞ்சரி கூறுகின்றமையை நோக்குகின்ற போது மூலாலயம் விமானத்துடன் அமைய வேண்டிய அவசியத்தையும் பரிவாராலயம் விமானமின்றி அமையலாம் என்பதையும் உணரமுடிகின்றது. இவ்வகையில் சிவாக மங்களும் சிற்பசாஸ்திரங்களும் பரிவாரங் களின் எண்ணிக்கை, ஸ்தானம், சிற்பலட்சண விதிமுறைகள், பரிவாராலயங்களின் அமைப்பு முறை போன்ற விடயங்களை மிகச்சிறப்பாக எடுத்துக்கூறுகின்றன.

### நிறைவுரை

சிவாலயங்கள் தற்போதய சூழ்நிலையில் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங் கொடுத்துவருகின்றன. புதிய சிவாலயங்களை அமைத்தல் என்பதற்கு மேலாகப் பழைய சிவாலயங்களைப் புனரமைத்தலே தற்போது அதிகமாக இடம்பெற்று

வருகின்ற செயற்பாடாகும். இச்சந்தர்ப் பத்தில் பழமைகளுக்குப் புதிய வடிவம் கொடுத்தல் எனும் தன்மையில் பல்வேறு சவால்கள் மேலெழுகின்றன. பரிவாரா லயங்கள் பற்றிய கருத்தமைவுகளும் இவ் வகையில் கவனத்துக்குரியதாகின்றன. சிவாலயங்களில் பரிவாரங்கள் என்னும் தன்மையுடன் அமையத்தக்க தெய்வங் களைச் சிவாகமங்கள் வரையறை செய்து ள்ளமை நோக்கத்தக்கது. சண்டேஸ்வரர், பைரவர் எனும் சமகால முக்கியத்துவம் பெறும் தெய்வங்கள் பரிவாரங்களாகச் சிவாகமங்களில் சுட்டப்படாதுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்க விடயமாகும். சிவாகமமரபில் அமையப் பெறும் சிவாலயக் கட்டடக்கலை அமைப்பில் பரிவாரங்கள் எட்டு, பதினாறு, முப்பத் திரண்டு என விரிவுபெறும் தன்மையதாக அமைகின்றன. அஷ்டபரிவாரங்களில் விநாயகர், சுப்பிரமணியர், நந்தி தவிர்ந்த ஏனைய தெய்வங்களான அகத்தியர், காத்யாயனி, பிரமா, விஷ்ணு, பாஸ்கரர் ஆலயபரிவாரங்களில் மிகவிரிவுபட்ட தன்மையில் அமையாது விளங்குவதும் சுட்டிக்காட்டத்தக்கது. சுப்பிரபேதாகமம் மூலவர் தவிர்ந்த ஏனையவை பரிவார ங்கள் என்றும், மண்டபங்களின் பரந்த தன்மைகூடப் பரிவாரவிதிப் படலத்திலே கூறப் படுகின்றமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. இதேவேளை காமிகா கமகத்தில் பரிவாரத் தெய்வங்களின் ஸ்தாபனக் கிரியை மரபுகள் மாத்திரமே கூறப்பட்டு ள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

சிவாகம மரபில் பிரகார இலட் சணவிதிப் படலம் கூறும் தன்மையில் யாழ்ப்பாணத்தில் காணப்படும் சிவால யங்கள் ஒரு பிராகாரமுடையனவாகத் திகழ்கின்றன. அவற்றின் உட்பகுதியில் பரிவாரங்கள் கோஷ்டங்கள், மண்ட பங்கள் எனும் பல்வேறு அம்சங்கள் ஒன்றுபடுகின்றமை கவனத்திற் கொள்ளத் - தக்கது. சூரியனுக்குரிய பரிவார ஆலயமானது சிவாலயவாயிலின் வலது, இடது பக்கத்தில் அமையும் அதேவேளை தனியாக நவக்கிரகக் கோயிலாக விரிவு படும் தன்மைகளும் உண்டு. பிரம்மா, துர்க்கை ஆகியோர் கோஷ்ட தெய்வங் களாக அமையும் தன்மைகளையும் காண முடிகின்றது. விஷ்ணுவின் உருவமானது சிவாலயங்களிற் பரிவாரமாகவும், விமானங்களிலும், கோபுரங்களிலும், தூண்களிலும் இடம்பெறுவதும் அவதா னிக்க முடிகின்றது. இவ்வாறு இடம் பெறும் உருவங்கள் சிவனின் பரிவார தெய்வங்கள் எனும் அடிப்படையிலேயே அமைகின்றன எனக் கொள்ளலாம்.

சிவாகமத்தில் பூரண அறிவு பெற்ற சிவாச்சாரியாரின் வழிகாட்டலில் சகல சாஸ்திரங்களும் கற்றறிந்த பரம்பரை வழிவந்த அறிவுடைய தகுதியான ஸ்தபதி யினாலேயே ஆலயம் நிர்மாணிக்கப்ப டுதல் சாலச்சிறந்ததாகும். தற்போது சில ஆலயங்களில் கட்டுமானப்பணிகளை ஆரம்பிக்கும் போது ஆலய நிர்வாகசபை யினரால் கேள்வி விண்ணப்பங்கள் கோரப்பட்டு கட்டுமானப்பணியானது ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றது. இந்தநடைமுறையினால் அளவுப்பிரமாணங்கள் பற்றிய ஆழ்ந்த தேர்ச்சியையும், சிறந்த பட்டறிவையும் கொண்ட மரபுரீதியான ஸ்தபதிகள் ஆலயக்கட்டுமானத் திருப்பணிகளில் பங்குபற்ற முடியாத சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.இது குறித்த கருத்தாடல் கள் எதிர்காலத்தில் நிகழ்த்தப்பட வேண்டி யமை இன்றியமையாததாகும்.

*அட்டவணை 01*

| படலம் | காரணாகமம் | காமிகாகமம் | சுப்பிர பேதாகமம் | அம்சுமத் பேதாகமம் | அஜிதாகமம் | கிரணா கமம் |
|---|---|---|---|---|---|---|
| கர்ஷணம் | II . 3 | I . 11-14 | I . 25 | 78 | I .7 | III.24 |

*அட்டவணை 02*

| படலம் | காரணா கமம் | காமிகா கமம் | சுப்பிர பேதாகமம் | அம்சுமத் பேதாகமம் | அஜிதாகமம் | ரௌரவா கமம் | தீப்தாகமம் |
|---|---|---|---|---|---|---|---|
| பிராகார லட்சண விதி | I . 8 | I . 71 | I . 31 | 42 | 38 | 41 | 12 |

*அட்டவணை 03*

*சிவாகமங்கள் சுட்டும் சிவாலய அஷ்டபரிவாரங்கள்*

| திசை | காரணாகமம் பாகம் -1 60.9,10 | ரௌரவாகமம் பாகம் - 11 32.1-3 | அஜிதாகமம் பாகம் - 11 39.7-10 | தீப்தாகமம் 67.1,2 | யோகஜாகமம் 17.15½ - 17 | வீராகமம் 41.3-6 | சுப்பிரபேதாகமம் 39.26 – 28 ½ | தீப்தாகமம் 11.15- 17 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கிழக்கு | விருஷபம் | விருஷபம் | விருஷபம் | விருஷபம் | விருஷபம் | விருஷபம் | சூரியன் | விருஷபம் |
| அக்னி | அகஸ்தியர் | துர்க்கா | ப்ரம்மா | காத்யாயனி | துர்க்கா | துர்க்கா | அக்னி | சிம்மவாஹினீ |
| தெற்கு | காத்யாயனி | சாமுண்டீ | மாத்ருகணம் | மாத்ருகணம் | சப்தமாத்ரு | மாத்ருகணம் | மாத்ருகணம் / விஷ்ணு | மாத்ருகணம் |
| நிருதி | கணேஸ்வரர் | கணேசர் | விநாயகர் | கணநாயகர் | கணநாதர் | விக்னேசர் | விக்னேசர் | விக்னநாயகர் |
| மேற்கு | பிரம்மா | ஷண்முகர் | ஸ்கந்தர். | சுப்ரம்மண்யர் | சுகுமாரன் | குமாரன் | சுப்ரம்மண்யர் | குமரன் |
| வாயு | ஷண்முகர் | ஜ்யேஷ்டா | ஜ்யேஷ்டா | ஜ்யேஷ்டா | ஜ்யேஷ்டா | ஜ்யேஷ்டா | ஜ்யேஷ்டா / லட்சுமி | காகவாஹினீ |
| வடக்கு | கேசவர் | விஷ்ணு | விஷ்ணு | கேசவர் | விஷ்ணு | விஷ்ணு | துர்க்கா / பிரம்மா | கேசவர் |
| ஈசானம் | பாஸ்கரன் | பானு | ரவி | பாஸ்கரன் | சண்டேசர் | பாஸ்கரன் | சண்டேஸ்வரர். | பாஸ்கரன் |

ஆதாரம் : மூலாகமங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை

## உசாத்துணை

அஜிதாகமம், Vol I,II,III, (1964, 1967 &1991) N.R. Bhartt. (Ed.) Institute Francais, D'indologic , Pandicherry.

உத்தரகாரணாகமம் (கிரந்தலிபி) (1927) மயிலை அழகப்பமுதலியார் (பதி.) இரண்டாம் பதிப்பு, சிவஞானபோத யந்திரசாலை, சென்னை

காமிகாகமம் (பூர்வபாகம்) (தேவநாகரலிபி), 1975, செ.சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

பூர்வகாரணாகமம் (கிரந்தலிபி) (1922) மயிலை அழகப்பமுதலியார் (பதி.) இரண்டாம் பதிப்பு, சிவஞானபோத யந்திரசாலை, சென்னை.

ஸூப்ரபேதம் (ஆகமம்) (கிரந்தலிபி) (1907) செ.சுவாமிநாதசிவாச்சாரியார் (பதி.) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.

மயமதம் (முதலாம் பாகம்) (1966) மயமுனிவர் கே.எஸ்.ஸூப்ரமண்ய சாஸ்திரிகள், (மொ.பெ) பி.ஏ நாராயணஸ்வாமிஅய்யர் (பதி.), ஸரஸ்வதி மஹால், தஞ்சை.

Kramrisch & Steela. (1976 ). The Hindu Temple, Vol 01, Motilal Banarsidas, Delhi.

Rauravagama, VolI,II,III, (1961, 1972 & 1988) N.R.Bhatt (Ed.), Institute Francars, Dindologic, Pondichery.

Sivagama Paribhasa Manjari, (தேவநாகரலிபி) (1979) Bruno Dagens, (Ed.) Institute Francars, D'indologic, Pandicherry.